# விக்கிரவாண்டி தொகுதியில் - கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு பிரச்சாரப் பயணக் காட்சிகள்!



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலுக்கான இறுதிக் கட்டப் பிரச்சாரத்தை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் – விக்கிரவாண்டி பேரூராட்சியில் நேற்று முன்தினம் மேற்கொண்டு, கழகத்தின் வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து வாக்குகள் சேகரித்தார். அவரது உரை கேட்க கண்ணுக்கெட்டிய தூரம் வரை இடைவெளி சிறிதுமின்றி பல்லாயிரவர் திரண்டு நின்ற எழுச்சிமிகு காட்சியையும் இப்படத்தில் காணலாம்!



விக்கிரவாண்டி – நேமூர் பகுதியில் திரளாகக் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். கழக அரசின் சாதனைப் பயணத்திற்கு மேலும் ஒரு நற்சான்றாக கழகத்தின் வேட்பாளர் அன்னியூர் சிவாவை வெற்றி பெறச் செய்வீர்! என உரையாற்றினார்.





மக்கள் நலனையும் – மாநிலத்தின் நலனையும் முன்னிறுத்தி வெற்றிகளைக் குவித்து வரும் நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிப் பயணம் தொடர்ந்திட விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவாக விக்கிரவாண்டி மத்திய ஒன்றியத்திற்குட்பட்ட தும்பூர் பகுதியில் இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாக்குகள் சேகரித்தார். 3 ஆண்டுகளில் நம் முதலமைச்சர் அவர்கள் செய்துகாட்டிய சாதனைகளையும் – இத்தொகுதிக்கு நமது அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும் எடுத்துரைத்து, கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுமாறு தும்பூர் பகுதி மக்களிடம் கேட்டுக் கொண்டார். விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி உடன் உள்ளார்.